**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No. 111/2019**
**Prosecution Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | கலாமணி (PW1) | Caste | |
| Husband's Name | தேவராஜ் | Calling | |
| Village | நரியம்பள்ளி | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07th day of January 2025** by M.Thangamani, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனக்கு பங்காளி முறை ஆவார்கள். எனக்கும் எதிரிகளுக்கும் பொதுவாக பங்கு கிணறு ஒன்று உள்ளது. கடந்த 02.08.2017 ஆம் தேதி எதிரிகளுக்கு தண்ணீர் இறைக்கும் முறை ஆகும். காலை 9 மணி அளவில் எதிரிகள் வந்து மோட்டாரை போட்டார்கள். அன்றைய தினம் 2 பீஸ் மின்சார இணைப்பு மட்டுமே இருந்ததால் பியூஷ் போய்விட்டது. அது தெரியாமல் பாப்பாத்தி மோட்டரை ஆன் செய்துவிட்டு அங்கிருந்து போய்விட்டார்.

2. நான் வெளியே வந்து பார்த்துவிட்டு மோட்டார் பியூஸ் போய் இருந்ததால் ஸ்விட்சை ஆப் செய்து விட்டேன். ஆனால் மறுமடியும் வந்து பாப்பாத்தி மோட்டாரை போட்டார். நான்போய் பாப்பாத்தியிடம் பியூஸ் போய் இருக்கிறது அதனால் மோட்டரை போடவேண்டாம் என்று சொல்லிவிட்டு ஆப் செய்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். ஆனால் மீண்டும் மீண்டும் அவர் மோட்டரை போட்டதால் மோட்டர் பழுதாகிவிட்டது. மோட்டார் பழுதான விவரம் அன்றை தினம் எனக்கு தெரியாது. மறுநாள் எங்கள் முறை என்பதாலும் பீஸ் சரியாகிவிட்டதாலும் நான் போய் காலை மோட்டரை போட்டேன்.

3. மோட்டாரில் புகை வந்தது. நான் அருகில் குடியிருக்கும் எதிரிகளிடம் நேற்று சொன்னதை கேட்காமல் மோட்டரை போட்டதால் மோட்டார் பழுதாகிவிட்டது என்று கேட்டேன். அதற்கு பாப்பாத்தியின் மகனான ராமகிருஷ்ணன் என்னை பார்த்து கண்டாரோழி வப்பனோழி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிக் கொண்டே என் அருகில் வந்து என்னை பிடித்து கீழே தள்ளிவிட்டார். பாப்பாத்தி என் கண்ணத்தில் அறைந்து என் 2 கைகளையும் பிடித்துக் கொண்டார். ராமகிருஷ்ணன் ஒரு கல்லை எடுத்து என் வாயில் அடித்தார். அதில் எனக்கு 1 பல் உடைந்துவிட்டது.

4. மேலும் ராமகிருஷ்ணன் கையை மடித்து என் வலது கண்ணில் குத்திவிட்டார். சத்தம் கேட்டு என் வீட்டில் இருந்து என் மகள் கயல்விழி, அம்மா பூவாத்தாள் பக்கத்து தோட்டத்தில் இருந்து ஜெயலட்சுமி நடராஜன் ஆகியோர் வந்ததால் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

5. என் மகள் அன்னூரில் இருக்கும் எனது மகன் கார்த்திகேயனுக்கு போன் செய்து வரவழைத்து என்னை அவிநாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு முதலுதவி முடித்து பாலச்சந்தர் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டேன். நான் அங்கு சிகிச்சையில் இருந்த போது போலீசார் வந்து நடந்த விவரத்தை கேட்டார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் . **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பு) :–**

1. 02.08.2017 அன்று எங்கள் முறையில் நீங்கள் ஏன் மோட்டாரை நிறுத்தக் கூறவேண்டும் என்றால் அன்று மின்சார இணைப்பில் பீஷ் போய் இருந்தது அதனால் மோட்டார் பழுதுபட்டால் இருவரும்தான் செலவு செய்யவேண்டுமென நினைத்து மோட்டாரை நிறுத்தக் கூறினேன். 03.08.2017 அன்று சேட்டான் என்பவருக்கு தண்ணீர் முறை உள்ள நிலையில் நான் தண்ணீர் எடுத்துவிட்டுவிட்டு எதிரியையும் அடித்துவிட்டேன் என்றால் சேட்டான் என்பவரது பூமியையும் நான்தான் கடந்த 10 வருடங்களாக பார்த்து வருகிறேன் அதனால் நான் தண்ணீர் எடுத்துவிட்டேன்.

2. அடுத்தவர் முறையில் தண்ணீர் எடுத்துவிட்டுவிட்டு ஏன் அனைத்து செலவுகளையும் எங்களை செய்ய கூறினீர்கள் என்றால் நான் செலவு செய்ய கூறவில்லை ஏன் அவ்வாறு மோட்டாரை எடுத்துவிட்டீர்கள் என்றுதான் கேட்டேன். கடந்த 1 ½ வருடங்களாக நான் மட்டும்தான் செலவு செய்தேன் எதிரிகள் எந்த செலவும் செய்யவில்லை.

3. முதல் எதிரியாகிய நான் அடிக்காமல் நான் அடித்தேன் என்று பொய்யாக புகாரில் கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல, எதிரிதான் என்னை கீழே தள்ளிவிட்டார் எனக்கு காயம்ஏற்பட்டது.

**சாட்சி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>VELLINGIRI LOGANATHAN Digitally signed by VELLINGIRI LOGANATHAN Date: 2025.01.07 20:17:11 +0530<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |